# இன்றைய மேதினத்திற்கு எழுச்சிமிகு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மிகத்தீவிரமாக இடம்பெற வுள்ள மே தினக் கொண்டாட் டத்திற்கான ஏற்பாடுகள் நேற்று மாலை நிறைவுபெற் றன. நேற்று மாலைவரை ஊர்வலங்களிற்கான அழைப்பு கள் யாழ். குடாநாடெங்கும் விடுக்கப்பட்டன. யாழ். குடா நாட்டின் அனைத்து உழைக் கும் தொழிலாளர்களையும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளது.

இந்த அழைப்பில் முக்கிய மாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பின்னாலே தொழிலாளர் சக்தியின் திர ண்ட ஆதரவின் வெளிப் பாட்டை உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்று மக் களுக்கு ஒலிபெருக்கிகள்மூலம் எடுத்துரைக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்கள், தனி யார் தொழிற்பீடங்கள், அரச சார்பற்ற பொது நிறுவனங் கள், சங்கங்கள், அமைப்புகள் அனைத்தும் இந்த மே தின ஊர்வலத்தில் பங்குபற்றுவதற் கான ஏற்பாடுகள் நேற்று மாலைவரை வெகு மும்முர மாக நடைபெற்றுவந்ததைக் காணமுடிந்தது. மேலும் அப தானக்க கூடியதாகவிருந்தது

காலை 9 மணிக்கு மருதனார் மடத்தில் இருந்து ஆரம்பிக் கும் மேதினப் பேரணிக்கு குடா நாட்டின் அனைத்துப் பகுதிகளில்இருந்தும் மக்களை அழைத்து வருவதற்கான வாகனஏற்பாடுகள்செவ்வனே நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேதினப்பேரணியில்கலந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

பக்கங்கள் 04

விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 18 (01 - 05 - 1991) புதன்கிழமை ஓசை: 72

## நிரந்தர முகாம்கள் அமைக்க ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நிரந்தர முகாம்கள் அமைக்க யாழ். செயலக அதிகாரிகள் திட்டமிட்டு பொது நிறுவனங்களுடன் ஆலோசனை செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

தீவுப் பகுதியில இருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள பத்தொன்பதினாயிரம் குடும்பங்களில் பதினாறாயி ரம் குடும்பங்கள் தமது (4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். நகரில் நிகழ்ந்த வெடிவிபத்தில் 12 புலிகள் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகர்ப்பகுதியில் இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் பன்னிரெண்டு புலிகள் மரணமடைந்தனர். மேலும் பத்து பொது மக்கள் காயமடைந்தனர். பன்னிரெண்டு வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுக்காலை 6.30 மணி யளவில் இடம்பெற்ற இவ் வெடிவிபத்தில் மரணமடைந்த போராளிகளின் விபரம் வருமாறு:-

★ அப்பா (குமாரசிங்கம் சுந் தரலிங்கம் வேல்வீதி, மயி லிட்டி)

★ தேவதாஸ் லோறன்ஸ் (145/1, ஆஸ்பத்திரிவீதி,யாழ் ப்பாணம்)

★ பாலகிருஸ்ணன் சிறீதர் (14 இராசாவினதோட்டம்,யாழ்ப் பாணம்)

★ சுப்பிரமணியம் மதியழகன் (முத்தமிழ்வீதி, 1ஆம்ஒழுங்கை கொட்டடி, யாழ்ப்பாணம்)

★ திருநாவுக்கரசு பவீந்திரன் (உரும்பராய் கிழக்கு, உரும் பராய்)

★ கார்த்திகேசு குமார் (நாவ லர்வீதி, நல்லூர்)

★ பெரியசாமி நாகேஸ்(27/16 புங்கங்குளம்வீதியாழ்ப்பாணம்

★ செல்வம்காமினி(18 ஆனந்த வடலி, கொழும்புத்துறை)

★ செலஸ்ரின் ஆனந்தராஜ் (17/11 சென்ஜேம்ஸ்வீதி, குரு நகர்)

★ தர்மன் ஸ்டீபன்(13/1 சென் ஜேம்ஸ்வீதி, குருநகர்)

★ சிவப்பிரகாசம் சிறிகாந் (ஆடியபாதம்வீதி, மருத்துவக் கல்லூரி அருகில், கொக்குவில்)

★ ஆறுமுகம் சிவனேசன் (மோகனதாஸ் வீதி கொக்கு வில்மேற்கு, கொக்குவில்)

இவர்களுக்கு தமிழீழ விடு தலைப்புலிகள் சமதுவீரவணக் கத்தைத் தெரிவித்துக் கொள் கின்றனர்.

## 12 போராளிகளுக்கு அரியாலையில் அஞ்சலி

(அரியாலை)

யாழ்நகர்பகுதிக்குஅண்மையில் அமைந்துள்ள விடுதலைப்புலி களின்முகாமில்நேற்றுக் காலை 6.30 மணியளவில் ஏற்பட்ட வெடிவிபத்தில் பலியான பன் னிரண்டு வேங்கைகளான அப்பா, லோறன்ஸ், சிறி தரன், பவீந்திரன், குமார், நாகேஸ் காமினி, ஆனந்த ராஜா, ஸ்டீபன், சிறிகாந், சிவநேசன் ஆகியோரின் பூத வுடல்கள் நேற்றுப் பிற்கல் அரியாலை காசிப்பிள்ளை அரங்கில் மக்கள் அஞ்சலிக் காக வைக்கப்பட்டிருந்தன. ஏராளமான பொது மக்கள் வேங்கைகளின் பூதவுடல்க ளுக்கு கண்ணீர் அஞ்சலி செலு த்தினார்கள. பூதவுடல்களைத் (4ஆம் பக்கம் பார்க்க)

## 10 பொதுமக்கள் காயம் 12 வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப் பகுதியில் நேற்றுக்காலை 6.30 மணியள வில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட குண்டு வெடிப்பில் பத்துப் பொதுமக்கள் படுகா யமடைந்ததுடன் பன்னிரெண் டிற்கு மேற்பட்ட வீடுகளும் இரண்டு ஆலயங்களும் பலதத சேதமடைந்துள்ளன. மேற்படி குண்டு வெடிப்பில் பரமநாதன் இராசா (வயது 60 அம்மன் வீதி) ஆனந்த நடராசா மாலினி (வயது 35 கடைச் சாமி வீதி) அவரது மகள் ஆ சுஜாத்தா வயது 6) யோ கலிங்கம் (வயது 38 கடைச் சாமி வீதி) சிறிஸ்கந்தராஜா ரதிதேவி (வயது 40 கடைச் சாமிவீதிமணிவண்ணன்(வயது 14 பொன்னாலை) ஆறுமுகம் (4ஆம் பக்கம் பார்க்க)

## மகிழடித்தீவில் இராணுவம் மீது புலிகள் கிளைமோர்த் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத் தில் ரோந்துசென்ற சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுத லைப்புலிகள் கிளைமோர்த் தாக்குதல் மேற்கொண்டதில் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டது.

நேற்று முன்தினம் காலை 9-15 மணியளவில் படுவான் கரைப் பகுதியிலுள்ள கொக் கட்டிச்சோலை இராணுவமுகா மில் இருந்து மண்முனைத் துறைக்கு ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது மகிழ (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### ஆனந்தன்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு தடைமுகா மைச்சேர்ந்த சிறிலங்கா இரா ணுவத்தினருடன் நேற்று முன் தினம் பிற்பகல் 1 30 மணி யளவில் ஏற்பட்ட மோதலில் ஆனந்தன் (பத்மநாதன் கமல நாதன், பூநகரி) என்ற போராளி வீரமரணமடைந் துள்ளார். இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஆசிரியர் பதவி உயர்வுத் திட்டம்

சேவையிலுள்ள 1,80,000 ஆசிரியர் களுக்குப் பயன் பொருத்தமான பதவி உயர்வுத் திட் டமொன்றைக்கல்வி அமைச்சு செயற்ப டுத்தவுள்ளது இத் திட்டப்படி அனை த்து ஆசிரியர்களும் ஐந்துதரங் களில் அமர்த்தப்படவுள்ள னர்.

புதிதாக நியமனம் பெறும் உதவி ஆசிரியர்கள் தரம் ஐந் தில் சேர்த்துக்கொள்ளப்படு வர். பத்துப் புள்ளிகளைப் பெறும் ஆசிரியர்கள் தரம் நான்கிற்குப் பதவி உயர்வு பெறுவார்கள். சிறப்புப் பட்ட தாரிகளுக்கு 6 புள்ளிகளும், பட்டதாரிகளுக்கு 5 புள்ளி களும், பயிற்றப்பட்ட ஆசிரி யர்களுக்கு 3 புள்ளிகளும், பட் டப்பின் படிப்பிற்கு 2 புள்ளி களும் ஒதுக்கப்பட்டுள்ளன. மற்றும் ஆசிரியர் சேவையில் கடமையாற்றிய ஒவ்வொரு வருடத்துக்கும் ஒருபுள்ளி வீத தம் வழங்கப்படும்

தரம் ஐந்து உதவி ஆசிரியர் தரம் என்று அழைக்கப்படும். தரம் நான்கு ஆசிரியர் தர மாகும். தரம் நான்கிற்குப் பதவி உயர்வு சேவைக்கால (4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் கைது செய்த இருதமிழர் கோரக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத் தில் நான்கு பொதுமக்களைக் கைதுசெய்த சிறிலங்கா இரா ணுவத்தினர் இரு பொது மக் களைகொடூரமாகக் கொலை செய்து மண்டூர்ப் பாலத்தில் போட்டுள்ளார்கள்.

மண்டூர் இராணுவமுகாமில் இருந்து வெளியேறிய சிறி லங்கா இராணுவத்தினர் ஆனைகட்டியவெளி, காக்கா ச்சிவெட்டை, நெடிய வெட்டை ஆகிய மூன்று இடங் களையும் சுற்றிவளைத்து நான்கு பொதுமக்களைக் கைதுசெய்து மண்டூர் முகா (4ஆம் பக்கம் பார்க்க)

## கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத் தில் பாடசாலையில் கற்பித் துக் கொண்டிருந்த ஆசிரிய ரொருவரை சிறிலங்கா இரா ணுவத்தினர் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் சித்தாண்டி முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் இப்பகுதியிலுள்ள பாடசாலை யொன்றில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியரான நடராசா சிவராசா (வயது32) என்பவரைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென் றுள்ளனர்.

## சிறிலங்கா அரசால் புலிகளின் போர்த் திறனை முறியடிக்க முடியவில்லை

யாழ்ப்பாணப் பகுதிகளைக் கைப்பற்ற சிறிலங்கா அரசுப் படைகள் பெரும் முயற்சி களை மேற்கொண்ட போதி லும் தற்போதும் புலிகளின் பலமே இந்தப் பகுதியில் மேலோங்கியிருப்பதாக ஏ.எப். பி. செய்தியாளர் கூறியுள் ளார். கடல் மற்றும் விமான மார்க்கமாக அரசுப் படைகள் கடும் தாக்குதல் நடத்திய போதும் புலிகளின் போர்த் திறனை முறியடிக்க முடிய வில்லைஎனவும் அந்தச் செய்தி கூறியது

இந்தச் செய்தி மேலும் தெரிவிக்கையில் கடந்த சனி, ஞாயிறு, திங்கள் என்ற மூன்று நாட்களில் மட்டும் சுமார் எண்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என் (4ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்த மக்களுக்கு விசேட நிவாரண மையங்கள்

(யாழ்ப்பாணம்)

வேலணை உதவி அரசாங்க அதிபரும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரும் தற் போது யாழ் செயலகத்தில் தமது அலுவலக அதிகாரிகளு டன் சேவையாற்றி வருகின் றனர்.

தீவுப்பகுதியிலிருந்து இரா ணுவத்தாக்குதல்களால் இடம் பெயர்ந்து குடாநாட்டுக்குள் வந்துவிட்ட பத்தொன்பதினா யிரம் குடும்பங்களுக்கும் விசேட நிவாரணம் வழங்கும் மையங்கள் யாழ் நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக வேலணை உதவி அரசாங்க அதிபர் தகவல் தெரிவித்துள் ளார். புங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் நிவாரணம் பெறுபவர்களுக்கு சிராம்பியடி லேன் மணியம் கட்டடத்திலும், வேலணை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங் களில் நிவாரணம் பெற்றுவந் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**A/L இரசாயனம்**
A/L 92 Inorganic ஆரம்பம்
2.5.91 வி யா ழன் 6.30 A.M
ஆசிரியர்: சத்தீஸ்108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (R/1359)

## ஒத்துழைப்பு வழங்குக

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் நலன்பேணும் தினமான இன்று தமிழின எழுச்சி தினமாககருதி எழுதுபாரம்பரியகலை, கலாசார தொழில்களை சித்தரிக்கும் அலங்கார ஊர்திகளை ஒழுங்கு செய்வதுடன் இன்றைய பேரணியில் தமிழீழ விடுதலைப் புலிகள்மக்கள் முன்னணிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் மயிலிட்டி கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின் தலைவர் செ-தனபாலசிங்கம் கோரியுள்ளார்.

# குழந்தைகள் பிறப்பு வீதம் தமிழகத்தில் அதிகரிப்பு

(திருச்சி)

தமிழகத்தில் குறைந்து வந்த குழந்தைகள பிறப்பு வீதம் சென்ற ஆண்டுகளில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது என தமிழக அரசாங்கத்தின் செயலாளர் அந்தோனி தெரிவித்துள்ளார்.

1988 ஆம் ஆண்டு 1000 க்கு 22.7 ஆக இருந்த பிறப்பு வீதம் அதற்கு அடுத்த ஆண்டில் 23 1 ஆக அதிகரித்தது என்றும் அவர் கூறினார். மாநிலத்தில் குழந்தைகளின் இறப்பு வீதம் 1000க்கு 60 ஆக உள்ளதென்றும் அவர் தெரிவித்தார். தாய் சேய் நலம், ஊட்ட உணவு பற்றிய விடயத்தினாலேயே இது கவனிக்கப் படவேண்டி உள்ளது என்றும் இவர் கூறினார்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை லங்கா சீமெந்து துறைமுக தொழிலாளர்களுக்கான கூட்டம் ஒன்று வரும் 4 ஆம் திகதி இணுவில் அமெரிக்கமிஷன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் துறைமுக ஊழியர்களின் சம்பள நிறுத்தம் பற்றி ஆலோசனை நடத்தப்படவிருப்பதால் கூட்டத்திற்கு அனைத்துத் தொழிலாளர்களையும் வரும்படி காங்கேசன்துறை லங்கா சீமெந்து துறைமுக தொழிலாளர் சங்கத் தலைவர் தர்மநாயகம் கேட்டுள்ளார்.

## கனவு மெய்ப்படும்!

காரிருள் போக்கி
கயவரை விரட்டி
காவியம் பாடிட
வேள்வியில் குதித்தவர்

சாதனை படைத்தவர்
ஆயிரக் கணக்கில்
வீர வேங்கைகள்
ஆகுதியில் போயினர்

புதியதோர் புரட்சி
பாடிடப் புறப்பட்ட
இவர்கள் பாதியில்
மகிழ்ச்சியாய்ப் போயினர்

எஞ்சியோர் இனிவருவோர்
இவர்களின் பாடலின்
இறுதியடிகளைப் பாடியே
முடிப்பார் என்பதால்
மகிழ்ச்சியாய்ப் போயினர்.

- பைப்

## நேர்முகப்பரீட்சை

27- 04- 91 அன்று எமது பத்திரிகையில் கோரப்பட்ட
★ உட்புறப்படப்பிடிப்பாளர்
★ புகைப்படப் பிரதிகள் கழுவுதல் போன்ற
பதவிக்கான விண்ணப்பங்கள் அனுப்பியோரும் அனுப்பத்தவறியோரும் தங்கள் ஆவணங்களோடு 03- 05- 91 வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு எமது அலுவலகத்துக்கு சமுகம் தரவும்.

(B/2451)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளர்

### கப்டன் மொறிஸ்

### (செல்வன் தி. பரதராஜன்)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 12. 09. 1969 | 01. 05. 1989 |

ஓ மொறிஸ்; மாவீரனே!
மாற்றான் மார்புடைத்த மறப்புலி நின்
வீரத்தைச் சொல்லவா!
''மொறிஸ்'' என்ற பெயர் கேட்டு
முகம் வெளுறி முதுகொடிந்த
இந்தியனின் விந்தையைச் சொல்லவா!
காட்டிக் கொடுப்போரால் - நீ
அபிமன்யு ஆன கதை சொல்லவா!
தோழரைக்காத்து நீ களத்திலே பாடிய
போர்ப் பரணியைச் சொல்லவா!
நீ மரணித்த பின்னும் குறி வைத்த படியே
கரத்தினில் கிடந்த உன் போர்க் கலனைச்சொல்லவா!
நீஉரமாகிப் போனதனால் உறுதியுடன் முளைத்த - புது
வேங்கைகளைச் சொல்லவா!
உன் நினைவோடு களத்திலவர்
கனவுகளை நனவாக்கும் வேகத்தினைச் சொல்லவா!

ஆத்தியடி புலோலி மேற்கு, பருத்தித்துறை. — குடும்பத்தினர்

(B/2421)

# நினைவு கூருகின்றோம்...



கந்தையா கணேசலிங்கம்
(அனந்தர் - புளியங்குளம்)

**1991 - 05 - 01**



கப்டன் மொறிஸ்
(தியாகராஜா பரதராஜன் - பருத்தித்துறை)



லெப். ரம்போ
(தணிகாசலம் ஜெகதீசன் - பருத்தித்துறை)



சிறி/வெள்ளை
(வடிவேலு சிறிதரன் - பருத்தித்துறை)

1988 ஆம் ஆண்டு இதேதினத்தில் நாச்சிக்குடாவில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**2ஆம் லெப். சைமன்** (கபிரியேல் அந்தோனிப்பிள்ளை - அடம்பன், மன்னார்)

1989 ஆம் ஆண்டு வவுனியாவில் இந்தியப்படையினரின் சிறைஉடைப்பின் போது வீரமரணமடைந்த

**பெனா** (தில்லையம்பலம் தியாகராசா - விடத்தல்தீவு)
**செல்வந்தன்** (செல்லப்பா பாலேந்திரன் - இராசேந்திரன் குளம், வவுனியா)
**கந்தையா கணேசலிங்கம்** (அனந்தர் புளியங்குளம்)
**சிறீவையாபுரி செல்வம்** (முத்தையன்கட்டு)

இதே ஆண்டு பருத்தித்துறையில் இந்தியப் படையினருடனான மோதலில் சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**கப்டன் மொறிஸ்** (தியாகராஜா பரதராஜன் - பருத்தித்துறை)
**லெப். ரம்போ** (தணிகாசலம் ஜெகதீசன் - பருத்தித்துறை)
**சிறி/வெள்ளை** (வடிவேலு சிறிதரன் - பருத்தித்துறை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/ 2426)

### சிந்தனைக்கு

அடிமைத் தனத்தை அறுக்கும் ஆற்றல்
அடிமை ஒருவனின் சொந்தக்
கையிலேயே உள்ளது.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 01-05-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம் :2208
த.பெ.எண்: 05

# அடக்கு முறைக்கு எதிரான மே தினம்

இன்று மே தினம். உலகத் தொழிலாளர்கள் தமது உரிமையை வெற்றி கொண்டதனை நினைவு கூரும் நன்நாளாகும். அதேவேளை நிகழ்காலத்திலும் தொடரும் அடக்குமுறைக்கு எதிரான போராட்டங்களின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் தினமுமாகும்.

நிலப்பிரபுத்துவ காலத்தில் இருந்து அடக்கப்பட்டு வந்த தொழிலாளர்கள் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமது உரிமைக்கான போராட்டங்களை வேலைநிறுத்தங்கள் மூலம் ஆரம்பித்தனர். 1886 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த போராட்டம் 1889 இல் வெற்றியளித்தது. இதற்காகப் பலர் பல தியாகங்களைச் செய்ய வேண்டியிருந்தது. அமெரிக்காவில் நீதியே கேலிக்குரியதாகி பலர் தூக்குக் கயிற்றில் தொங்கினர். பலர் சிறை சென்றனர். சித்திரவதைப்பட்டனர். முதலாளிவர்க்கம் தன்னாலான சகல அடக்குமுறைகளையும் தொழிலாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் எதிராகப் பயன்படுத்தியது. ஆனால் தொழிலாளரின் உறுதியான போராட்டம் பல இழப்புக்களின் பின் அவர்களுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது.

அதேவேளை தொழிலாளர் வர்க்கம் உற்பத்தியின் பிரதான அங்கம். தொழிலாளர் வர்க்கம் இயங்காது போனால் உற்பத்தி மட்டுமல்ல சமூகத்தின் இயக்கமுமே அற்றுப் போய்விடலாம். இந்நிலையில், உற்பத்தியை மட்டுமல்ல சமூகத்தையும் இயக்க வேண்டியது தொழிலாளர்களின் கடமையாகின்றது. ஆகையினால் தொழிலாளர்கள் அரசியல் சமூக செயற்பாடுகளில் இருந்து விலகி நிற்றல் என்பது முடியாத காரியமாகும்.

மே தினத்தின் வரலாறு அது முதலாளி-தொழிலாளி வர்க்கங்களுக்கிடையிலான போராட்டம் எனக் கூறினும் உண்மையில் மேலாதிக்க வர்க்கத்தினருக்கும் அடக்கப்பட்ட மக்களுக்கும் இடையிலான போராட்டமே ஆகும் அன்று அமெரிக்காவில் ஏனைய எல்லா முரண்பாடுகளையும் விட முதலாளி - தொழிலாளி முரண்பாடே முனைப்பான பிரச்சினையாக இருந்தது. இதனால் தான் போராட்டம் தொழிலாளர்கள் போராட்டம் என வெளிக்காட்டப்பட்ட போதிலும் அதில் ஆண், பெண் சிறியவர், வயது முதிந்தோர் என்ற பால், வயது வேறுபாடின்றி மக்கள் கலந்து கொண்டார்கள். இவ்வாறு மக்கள் பலர் கூடிப் போராடிப் பெற்றதே தொழிலாளர் வெற்றியாகும். அதாவது அடக்கப்பட்ட மக்களின் வெற்றியாகும்.

இதே போன்று இன்று தமிழ் மக்களைப் பொறுத்து முனைப்பான போராட்டம் தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டமாகும். சிறிலங்கா பேரினவாதம் சிங்கள முதலாளி தொழிலாளிவர்க்க முரண்பாட்டை விட இனவாதத்தையும் தமிழர் மீதான அடக்குமுறை நடவடிக்கைகளையும் பிரதான முரண்பாடாக வளர்த்துள்ளது. அரசாங்கத்தின் சகல வளங்களையும் பிரயோகித்து தமிழரை அடக்கி ஒடுக்குவதில் அது தீவிரமாக இறங்கியுள்ளது.

தமிழரைப் பொறுத்து முதலாளி - தொழிலாளி முரண்பாட்டினை விட இன்று சிங்களப் பேரினவாத அடக்கு முறையே முனைப்பான பிரச்சினையாக உள்ளது. தமிழர் முதலாளி, தொழிலாளி என்ற பேதமின்றி தீவிர அடக்கு முறைக்குள்ளாகியுள்ளார்கள். இன்றுதமிழ்த்தொழிலாளர்கள் தமது உரிமையைப்பாதுகாப்பதை விடத் தமது தொழில்களையும், உயிரையும் பாதுகாக்க வேண்டியுள்ளார்கள். அதே போன்று முதலாளிகள் தமது தொழில் நிலைகளையும், உயிரையும் பாதுகாக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். இதன் காரணமாக இன்று சகல உரிமைகளையும் விட தமிழரின் அரசியல் உரிமை உடன் மீட்கப்பட வேண்டியதாகியுள்ளது.

இந்நிலையில், தமிழர் பிரதேசங்களில் நடைபெற உள்ள மே தினங்கள் புதுவடிவத்தினைப் பெற வேண்டும். தமிழர் மீதான அடக்குமுறைக்கெதிரான குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும். தமிழர் அனைவரும் சிறிலங்காவின் இன அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் உறுதியாக ஓரணியில் உள்ளனர் என்பதை சர்வதேச சமூகத்திற்கு புரியவைக்கவேண்டும். இதுவே இம்முறை எமது மேதின இலட்சியமாய் இருத்தல் வேண்டும்.

# அடக்கு முறைக்கு எதிராக அணிதிரள்வோம்

## - வடமராட்சி ஆசிரியர் ஒன்றியம்

(நமது நிருபர்)

சிறிலங்கா பேரினவாத அரசின் அடக்கு முறைகளினால் அல்லலுறும் தமிழ்த் தொழிலாளர் தினமாக இன்றைய மே தினம் விளங்குகின்றது. எமது தேசத்தின் விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்து வரும் இவ்வேளையில் சிங்கள பௌத்த பேரினவாத அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிராக ஒன்று திரண்ட சக்தியாக உலக அரங்கிற்கு எம்மை வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய நேரத்தில் வடமராட்சி ஆசிரியர் ஒன்றியம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து மே தின எழுச்சி ஊர்வலத்தில் கலந்து கொள்கின்றது.

இவ்வாறு நேற்று வடமராட்சி ஆசிரியர் ஒன்றியம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியின் அனைத்துத் தரத்திலான அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் இன்று நடைபெறும் மேதின எழுச்சி ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறும், ஒடுக்கப்பட்ட தொழிலாளர் தம் உரிமைக்காக திரண்டெழுந்த இந்நாளில் உரிமை மறுக்கப்பட்ட எம் இனத்தின் மீட்சிக்காகக் குரல் கொடுக்க வேண்டுமென்று ஆசிரியர் சமூகத்தையும், மாணவர்களையும் கேட்டுக் கொள்கின்றோம் என்றும் வடமராட்சி ஆசிரியர் ஒன்றியம் கேட்டுள்ளது.

## மேதின அழைப்பு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தீர்மானப்படி யாழ். மாவட்டத்தில் உளள சகல சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் (ஒரு சங்கத்தில் இருந்து நூறு) பிரதிநிதிகள் சமாசத்தினால் நடத்தப்படும் ஊர்வலத்தில்பங்குபற்றுமாறு சமாசத் தலைவர் திரு. ச. முருகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

## பனம்பொருள் பயிற்சி நிலையம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் ஜெயப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை நிறுவனம் கொழும்புத்துறையில் பனம் பொருள் கைப்பணிப் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. கொழும்புத்துறை கிழக்கு வசந்தபுரத்தில் உள்ள ஜெயப்பூர் தொழிற்சாலை கட்டடத்தில் நடைபெறும் இப்பயிற்சி நெறியில் 20 யுவதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். (43)

## ஒத்திவைப்பு

சிறிகாமாட்சி சனசமூகநிலையத்தால் நேற்றுநடைபெறஇருந்த பரிசளிப்பு விழா வரும் 03.05.91 அன்று மாலை 6.00 மணிக்கு நடைபெறும்.

## கிருஷ்ணமூர்த்தி பாட்டாளி மக்கள் கட்சியில்

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழக விவசாயிகள் பிரிவின் செயலாளர் நெல்லிக்குப்பம் ஆர். கிருஷ்ணமூர்த்தி பாட்டாளி மக்கள கட்சியில் சேர்ந்துள்ளார்.

இவர், விழுப்புரம் சட்டப் பேரவைத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமாகிய பொன்முடிக்கு எதிராகப் போட்டியிடுவார் என்று பாட்டாளி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை பத்திரிகையாளரிடம் பேசிய திரு. கிருஷ்ணமூர்த்தி தி. மு. க. தலைமை நெடுங்கால மூத்த உறுப்பினர்களுக்கு உரிய கௌரவம் வழங்கத் தவறி வருவதாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

## தேர்தல் களத்திலிருந்து

# புதல்வர்களை ஒதுங்குமாறு தேவிலால் கோரிக்கை

(டில்லி)

ஹரியானாசட்டப் பேரவைத் தேர்தல்களில் போட்டியிடுவதிலிருந்து விலகுமாறு தேவிலால் தனது பிள்ளைகளாகிய ஓம் பிரகாஷ் சௌதாலாவையும், றஞ்சித் சிங்கையும் கேட்டிருக்கிறார்.

ஒரே குடும்பத்திலிருந்து மூனறு பேர் போட்டியிடுவது குடும்ப நலன்களை மேம்படுத்துவது போல் அமையுமென்பதால் தனது பிள்ளைகளைப் போட்டியிடுவதிலிருந்து விலகுமாறு கேட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேநேரம் தேவிலாலின் இரு புதல்வர்களும்அந்தவேண்டுகோளை ஏற்றுக்கொண்டதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் தேர்தல் ஆணையாளர் உத்தியோக பூர்வ அறிவித்தல்கள் தனக்கு இன்னமும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

# நேபாளத்தில் தேர்தல்; கண்காணிக்க சாாக குழு

(கொழும்பு)

நேபாளத்தில் அடுத்தமாதம் 12ஆம்திகதி நடை பெற இருக்கும்பாராளுமன்றத் தேர்தலை கண்காணிக்க 'சார்க்' அமைப்பின் கண்காணிப்புக்குழுஒன்று அங்கு செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழுவின் சார்க் அமைப்பிலுள்ள நான்குநாடுகளின் இருபது அரசாங்க சார்பற்ற பார்வையாளர்கள் செல்வார்கள் என்றும், இதில் நீதிவான்கள், அரசியல் அமைப்புத்துறைசட்டவல்லுநர்கள், கல்விமான்கள் ஆகியோரும் செல்லவுள்ளனர்.

# போருக்கு பிந்திய நிலைமை விவாதிப்பதற்கான சந்திப்பு

(குவைத்)

வளைகுடாப் போருக்குப் பிந்திய நிலைமைகள் குறித்து விவாதிப்பதற்காக அப்பிராந்தியத்தைச் சேர்ந்த ஆறுநாடுகள் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி குவைத்தின் தலைநகரில் கூடவுள்ளன. வளைகுடா ஒத்துழைப்புச் சபையின் வெளியுறவு அமைச்சர்கள் கூடும் இச்சந்திப்பில் அரபு இஸ்ரேலியப் பேச்சுக்கள் மற்றும் மத்தியகிழக்கு சமாதான மாநாடு குறித்தும் விவாதிக்கவுள்ளனர்.

# எண்ணெய் ஏற்றுமதிக்கு ஈராக் தயாராகவுள்ளது

(பக்தாத்)

எண்ணெய் ஏற்றுமதிக்குத் தான் தயார் என்று ஈராக் அதன் வாடிக்கை நாடுகளுக்கு அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபை விதித்துள்ள வர்த்தகத் தடை நீக்கப்பட்டதும் தன் வழமையான வாடிக்கையாளர்களுக்கு பெற்றோலியப் பொருளகளை மீளவும் ஏற்றுமதி செய்யத் தான் தயாராக இருப்பதாக ஈராக் அறிவித்துள்ளது.

அவசர தேவைகளுக்கு எண்ணெயை ஏற்றுமதி செய்ய ஈராக்கிற்கு அனுமதி வழங்குவதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க இன்று ஐக்கிய நாடுகள் குழு கூடவிருக்கிறது.

# சிரமதானப் பணி மூலம் சிறுதானியப் பயிர்ச்செய்கை

(கொழும்புத்துறை)

தொல்புரம் மத்திய சன சமூகநிலையம் வாசிகசாலை, இந்து இளைஞர் மன்றம் ஆகியனவற்றின் அங்கத்தினர்கள் சிரமதானப் பணி மூலம் உபஉணவு சிறுதானியப் பயிர்ச்செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார்கள்.

நிலையத்தின் ஆறு பரப்புக் காணியில் இக்கூட்டுப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மரவள்ளிக்கட்டை, பயறு, வெங்காயம், மிளகாய்க்கன்று, வாழை போன்றவற்றை உற்பத்தி செய்து நிலைய வளர்ச்சிக்கும், கிராம மக்கள் நல்வாழ்வுக்கும் அரும்பாடுபட்டு வருவதாக நிலையப் பொருளாளர் திரு கி. நடராசா தெரிவித்துள்ளார். (24)

## இரண்டாவது தொகுதி அனுப்பப்பட்டது

வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கான இரண்டாவது தொகுதி வினாப் பத்திரங்கள் நேற்று முன்தினம் அனுப்பப்பட்டதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## கவிஞர்களின் கவிதைதொகுதி

தமிழீழக் கவிஞர்கள் பலரின் உன்னதக் கவிதைகளை ஒரே நூலாக மிகவும் முயன்று கவிஞரும் நூலாசிரியரும் திரைப்பட நடிகருமான விஜயேந்திரன் தொகுத்துள்ளார்.

இந்நூல் மே முதல் வாரத்தில் சென்னையில் வெளியிடப்படவுள்ளது.

இவர் இலக்கிய ஆராய்ச்சித் திறனுக்காக இலக்கியத்தில் டிப்ளோமாவும், ஏற்கனவே அமெரிக்கப் பல்கலைக் கழகத்திடமிருந்து எம். ஏ. பட்டமும் பெற்றவராவர்.

## ஒன்பதாம் ஆண்டு மாணவர்களுக்கு

# கனிஷ்ட தொழில்நுட்ப தராதரப் பரீட்சை

(கொழும்பு)

பரீட்சைத் திணைக்களம் 9ஆம் வருட மாணவர்களுக்கென இந்த வருடம் டிசம்பர் மாதம் முதற் தடவையாக கனிஷ்ட தொழில் நுட்ப தராதரப் பரீட்சை நடத்துவதற்கு ஒழுங்குகளைச் செய்துள்ளது.

உயர்கல்வி அமைச்சின் யோசனையின் பிரகாரம் இந்தப் பரீட்சை நடத்தப்படுகின்றது எனவும் இந்தப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் க. பொ. த. சாதாரணதர பரீட்சை விண்ணப்பங்களுடன் கோரப்படும் எனவும் பரீட்சை ஆணையாளர் ஆதர்வெதமுல்ல தெரிவித்தார்.

அத்துடன் இந்தப் பரீட்சை எழுத்து மற்றும் செயல்முறை பரீட்சைகளை உள்ளடக்கியதாக இருக்கும் என்றும் எழுத்துப் பரீட்சையில் 30 புள்ளிகளும், தொழில் முறைப் பயிற்சிகளுக்கு 70 புள்ளிகளும் பெற வேண்டும் என்றும் ஆதர்வெதமுல்ல தெரிவித்தார்.

# 2ஆம் தவணை ஆரம்பம் பிற்போடப்படலாம்?

(யாழ்ப்பாணம்)

1991 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் தவணை ஆரம்பமாகும் திகதி பிற்போடப்படவிருக்கின்றது.

இராணுவ நடவடிக்கைகளால் பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்து பல பாடசாலைகளில் அகதிகளாக தங்கியிருப்பதால் பாடசாலைகளை முன்னர் குறிப்பிட்ட திகதியில் ஆரம்பிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது என்றும், இடம்பெயர்ந்த மக்களுக்கு மாற்று ஒழுங்குகள் மேற்கொண்டதன் பின்பே பாடசாலைகளைத் திறப்பதுபற்றி ஆலோசிக்கப்படும் என்றும் பெரும்பாலும் யூன் மாதம் முதல் வாரத்தில் இது சாத்தியமாகலாம் என்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் கருத்து வெளியிட்டனர். (க)

### 12 போராளிகள்

தாங்கிய பேழைகள் ஊர்வலமாக கச்சேரிவரை எடுத்துச் செல்லப்பட்டு பின்பு தகனக் கிரியைகளுக்காக மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. (11)

### இராணுவம் மீது

டித்தீவு என்னுமிடத்தில் வைத்து விடுதலைப்புலிகள் கிளைமோர்த்தாக்குதல் மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலால் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சேத எண்ணிக்கை விபரம் கிடைக்கவில்லை.

### இராணுவம்

முக்குக் கொண்டுசென்றனர்.

அன்றிரவு மண்டூர் பாலத்தில் இருவரின் தலை துண்டிக்கப்பட்ட உடல்கள் காணப்பட்டன. அன்றுகாலை கைது செய்யப்பட்ட பொதுமக்களில் இருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

### நிரந்தர முகாம்கள்

உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளதாகவும் மீதி மூவாயிரம்பேருக்குக்கே இந்த முகாம்கள் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் செயலக அதிகாரிகள் யாழ். நகரை அண்டிய சில பகுதிகளை பிரேரித்து பொது நிறுவனங்களுடன் ஆலோசனைசெய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது. (லோ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க உடுப்பிட்டி, பருத்தித்துறை கிளைகளால் கல்வி நிர்வாக சேவை வகுப்பு III போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு இம்மாதம் 4-ம், 5-ம் திகதிகள் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ். அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும்.

## விசேட சம்பள முற்பணம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப.நோ.கூ.சங்கம் தங்களது ஊழியர்களுக்கு யாழ். நாகேந்திரன் வீதியில் அமைந்துள்ள அவர்களது தற்காலிக அலுவலகத்தில்வைத்து நேற்று ஆயிரம்ரூபா விசேட சம்பள முற்பணம் வழங்கியுள்ளது. (88)

## ஒன்று கூடவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகஅனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்களையும் இன்று காலை 8 மணிக்கு பல்கலைக் கழகத்தில் ஒன்று கூடுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவரவைகேட்டுக்கொண்டுள்ளது.

## சந்தைகள் இயங்காது

(ஈச்சமோட்டை)

இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள மரக்கறி, மீன் சந்தைகள் மேதினத்தை முன்னிட்டு இயங்கமாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, கல்வியங்காடு, சுன்னாகம், பாஷையூர் போன்ற சந்தைகள் நடைபெறமாட்டா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (43)

# அதிபர் பரீட்சைக்கான கருத்தரங்குகள்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இலங்கைஅதிபாசேவை தரம் ஒன்று, இரண்டு, மூன்று போட்டிப் பரீட்சைகளுக்கான கருத்தரங்குகள் நடாத்த உள்ளது.

எதிர்வரும் மே 18 19 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், மே 22 ஆம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாசாலையிலும், மே25, 26, 27, 28ஆம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் 05 - 05 - 91ஆம் திகதிக்கு முன்னர் ஏற்கனவே நியமிக்கப்பட்ட எமது கருத்தரங்கு இணைப்பாளர்களிடம் பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். இந்தத் தகவலைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் த. மகாசிவம் தெரிவிக்கிறார்.

(விளம்பர இல: B 2454)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அணிசேராக் கொள்கையினை இந்தியா கைவிடும்

## பாரதீய ஜனதாவின் தேர்தல்விஞ்ஞாபனம்

(டில்லி)

இந்தியாவின் அணிசேராக் கொள்கை கைவிடப்படும் என்றும் இந்தியப் பாதுகாப்புப் படைக்கு அணு ஆயுத வல்லமை சேர்க்கப்படும என்றும் காஷ்மீருக்கு விசேட சலுகைகளை வழங்கும் 370 இந்திய அரசியல் அமைப்புச் சரத்து நீக்கப்படும் என்றும் நேற்று வெளியிடப்பட்ட பாரதீய ஜனதாக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அத்தேர்தல் விஞ்ஞாபனத்தில்:

வலுமிக்க மற்றும் சுயநிர்வாக உரிமை கொண்ட மாநிலங்களோடு கூடிய வலுவான மத்திய அரசு அமைக்கப்படும். குடியரசுத் தலைவரின் கீழான ஆட்சி பற்றி ஆராய கமிசன் நியமிக்கப்படும் எனவும் தெரிவிக்கபபட்டுள்ளது

அத்தேர்தல் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: பாபர் மசூதியை வேறுஇடத்திற்கு மாற்றுவதன் மூலம அயோத்தியில் ராமர் கோயில் கட்ட உறுதி கொண்டிருப்பதாகவும், சாதிக்கு எதிராக சாதியையோ, ஒரு வகுப்பாருக்கு எதிராக இன்னொரு வகுப்பாரையோ உறுத்தாத வகையில் ஏழைமக்களின் மேம்பாட்டிற்காக உழைக்கப்போவதாகவும கூறியுள்ளது. இந்தக் கட்சியின் தலைவர் திரு.முரளி மனோகர் ஜோசி நேற்று புதுடில்லியில் 38 பக்கங்கள் கொண்ட தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.

இவ் அறிக்கையில் மண்டல் கமிசன் சிபாரிசின் அடிப்படையில் இட ஒதுக்கீடு அமுலாக்கப்படும் என்றும் பொருளாதார ரீதியில் பின்னடைந்தவரின் நலன்கள் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. சிறுபான்மையினர் கமிசனுக்குப் பதிலாக மனித உரிமைகள் கமிசன் அமைக்கப்படும் என்றும் அக்கட்சி மேலும கூறியுள்ளது.

## இன்று இறுதிப் போட்டிகள்

(மணலாறு)

மணலாற்றில் கடந்ததிங்கள் செவ்வாய் ஆகிய தினங்களில் கிடுகு இழைத்தல், குட்டான் இழைத்தல் போன்ற தொழில் ஊககுவிப்புப் போட்டிகள் நடைபெற்றன. இன்றைய தினம் மாவட்ட மட்டத்தில் இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

### 10 பொதுமக்கள்

சத்தியராணி(வயது 16 கடைச்சாமி வீதி) கவிதா (வயது 13 கடைச்சாமி வீதி) தேவன் இளங்கோ யோகலட்சுமி (வயது 38 கடைச்சாமி வீதி) ராஜதுரை விஜித்தா (வயது19 கடைச்சாமி வீதி ஆகியோர் படுகாயம அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வேறு சிலர் சிறு காயங்களுக் குள்ளாகிச் சிகிச்சை பெற்றபின் வீடுசென்றுள்ளனர்.

இச் சம்பவத்தின் போது அருகிலிருந்த பன்னிரெண்டிற்கும் மேற்பட்ட வீடுகளும் கடைச்சாமி கோவில், நடேஸ்வரர் கோவில் ஆகியனவும் சேதமடைந்துள்ளன. காயமடைந்த பொதுமக்களில் மாலினி, சத்தியராணி. சுஜாத்தா, விஜிததா, மணிவண்ணன் ஆகியோர் கடந்த வார சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்து கடைச்சாமி வீதியில் தங்கியிருந்தனர் எனத் தெரியவருகிறது. (ச)

### ஆசிரியர்

அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

பத்து வருடச்சேவைக் காலத்தை மேலதிகமான கல்வித் தராதரங்களைப் பெறுவதன்மூலம் குறைக்கலாம் இது பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவாக அமையும்.

ஆசிரியர் சேவையில் தரம் மூன்று சிரேஷ்ட ஆசிரியர் பதவியாகக் கணிக்கப்படும். தரம் மூன்றிலிருந்து போட்டிப்பரீட்சையின் மூலம் தரம் இரண்டிற்குப் பதவி உயர்வு பெறலாம. தரம் ஒன்று விசேட பதவி - தரம் ஒன்று எனக் கணிக்கப்படும்.

சிறிலங்கா ஆசிரியர்சேவைச் சபை அமைக்கப்பட்டபின் இப்புதியதிட்டம்நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதேவேளை ஆண்டு 2000த்தில் பட்டதாரிகள் மாத்திரம் ஆசிரியர்கள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள்

# குடிமனைகள் மீது பலமான ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவம் குடிமனைகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதலை நேற்றுமாலை நடாத்தியவண்ணம்இருந்தது. இந்த ஷெல்குண்டுகள் சாட்டி, நாரந்தனை, மண்கும்பான், சரவணை பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன பல வீடுகள் சேதமடைந்துள்ளன என எமக்கு அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ஷெல்வேட்டுகளினால் எழும்புகைப் படலங்களை யாழ்.பண்ணை பாலத்தினருகே நின்று தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.

# தமிழீழக் காவற்றுறைக்கு ஆட்சேர்ப்பு

தமிழீழக் காவல் துறையினர் வெற்றிடமாகவுள்ளபதவிகளுக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளனர். பதினெட்டுக்கும் முப்பதுக்கும் இடைப்பட்ட வயதுடைய எட்டாம் வகுப்பு முதல் க.பொ.த (உயர் தரம்) வரை கல்வித் தகைமையை உடைய ஐந்து அடி ஆறு அங்குலத்திற்கு குறையாத உயரமுடையவர்கள் காவலர் பதவிக்கு தகைமையுடையவர்களாவர். விண்ணப்பதாரிகள் இம்மாதம் ஏழாம் திகதியன்று விடுதலைப் புலிகள் மக்கள முன்னணியின் யாழ் பிரதேசக் காரியாலயத்திற்கு சான்றிதழ்களுடன் நேரில் வரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

### பலாத்காரத்திற்கான

# காரண காரியத்தை மாற்றி அமைக்க வேண்டும்

## - பிரேமதாசா

(கொழும்பு)

பலாத்காரத்தைத் துப்பாக்கியால் மாத்திரம் அடக்கிவிட முடியாது. பலாத்காரத்திற்கான காரண காரியத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா தெஹிவளையில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும் போது தெரிவித்தார்.

சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் நிலவிய சீர்கேடுகளுக்கு எதிராக இளைஞர் சமூகம் போராடியது என்றும, 1988ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போதுசமாதானம், நிறைவான வாழ்க்கை, கட்டுப்பாடு, நிதி ஆகியவற்றைவழங்குவதென ஐ தே. கட்சி நம்பிக்கை தெரிவித்ததெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இடம் பெயர்ந்த

தோருக்கு மானிப்பாய் வீதியிலுள்ள பிள்ளையார் விலாஸ் அருகிலும், ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களில் நிவாரணப்பொருள்கள் பெற்றுவந்தவர்களுக்கு காங்கேசன் வீதி ஸ்ரான்லி ரோட் சந்தியிலுள்ள ஒரு கடையிலும் அகதிகள நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படவுள்ளதாக வேலணை உதவி அரச அதிபர் கூறினார்.

தீவுப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள பெருந்தொகையான மக்களுக்கு வழங்குவதற்கென உடுதுணிகளோ, சமையல் பாத்திரங்களோ தம்மிடம் இல்லையென யாழ். மேலதிக அரச அதிபர் தெரிவித்துள்ளார். இடம்பெயர்ந்து வந்த பொதுமக்கள் வெறுங்கையுடன் வந்ததால் நேற்றும், நேற்று முன்தினமும் அரசசார்பற்ற நிறுவனங்கள் சமைத்த உணவுகளை வழங்கியுள்ளன. இன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளூடாக நிவாரணப் பொருள்கள வழங்கவுள்ளோம் ஆனால் இவற்றை சமைத்து உண்ண அவர்களிடம் பாத்திரங்கள் இருக்குமெனக் கூற முடியாது என்று அவர் கூறினார். (லோ)

### புலிகளின்

றும் மேமாத மத்தியில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடக்கவிருப்பதால் சிறிலங்கா அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஆர்வமாக இல்லையெனவும் கூறியது.

### இன்றைய

கொள்ளும் அணிவகுப்பு பின்வரும் ஒழுங்கு முறையில் நகரும் என அட்டவணை தயாரிக்கடபட்டுள்ளது. முதலாவதாக விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் ஊர்தி பவனியும், அணிவகுப்பும இடம் பெறும் இதனைதொடர்ந்து ப. நோ. கூ சங்க அணிவகுப்பும் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களின் அணிவகுப்பும் தொடர்ந்து அலங்கார ஊர்தி பவனிகளில் வலிகாமம் பகுதி ஊர்திகளும், வடமராட்சிப் பகுதி ஊர்திகளும், தென்மராட்சிப் பகுதி தீவுப்பகுதி ஊர்திகளும் அணிவகுப்பும் இடம் பெறும்.

தொடர்ந்து தமிழீழ ஆய்வு நிறுவன ஊர்தியும், மகளிர் முன்னணியினரின் அணிவகுப்பும் ஊர்திப் பவனியும் இடம் பெறும், நீதி நிர்வாகப் பிரிவினரின் பவனியைத் தொடர்ந்து கூட்டுறவாளரின் பேரணி இடம் பெறும், தொடர்ந்து அனைத்து தொழிற்சங்கங்களின் பேரணியும், அலங்கார ஊர்திகளின் பவனியும் இடம் பெறும்.

இப்பேரணி நல்லூர்க் கந்தசுவாமிகோயிலைவந்துசேரும். அங்கு மாபெரும் மேதினப் பொதுக்கூட்டம்இடம்பெறும். அதில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர்.